People's Watch
No.32, Besant Road, Chokkikulam, Madurai - 625 002
Phone: +91-452-2531874 & 2539520 Fax: +91-452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.peopleswatch.org

A Network Towards Human Rights Monitoring, Intervention, Campaign, Research and Documentation
(A Programme Unit of the Centre for Promotion of Social Concerns)

**07.01.2017**

# பத்திரிகைச் செய்தி

## காவலர்கள் தாக்கியதில் பட்டியலினச் சிறுவனின் காதுகேட்குந்திறன் பாதிப்பு

குற்றமிழைத்தக் காவலர்கள் மீது வன்கொடுமைத் தட்டுப்புச்சட்டதின் கீழ் நடவடிக்கை எடுக்க மக்கள் கண்காணிப்பகம் கோரிக்கை.

விருதுநகர் மாவட்டம் திருச்சுழி அருகே உள்ள ஆத்திப்பட்டியைச் சேர்ந்த மாரிச்சாமி(43) என்பவரின் மகன் சக்தி (18). பட்டியலின குறவர் சமூகத்தைச் சேர்ந்தவர்,இவர் கடந்த 4.1.'17 அன்று காலை சுமார் 10 மணிக்கு அருப்புக் கோட்டை சென்றார். அப்போது பி.ஆர்.சி பஸ் டெப்போ அருகில் முத்து என்பவர் நீ தாண்டா என கடையில் நாற்பது ஆயிரம் ரூபாய் திருடினாய் என்று கூறி அவர் சொந்த ஊரான குலசேகரநல்லூர் கூட்டிச் சென்றுள்ளார். முத்து தன் மனைவியிடம் சக்தியைக் காண்பித்து இவன் தானே நேற்று நம் வீட்டில் பணத்தைக் களவாடியது என்று கேட்டுள்ளார். அதற்கு முத்துவின் மனைவி இவன் இல்லை. அவன் வளத்தியாக் கருப்பா இருந்தான் என்று கூறியுள்ளார். அப்போது அவ்வழியாகக் ஸ்கூட்டியில் வந்த காவலர் இருவர் இதைக் கவனித்து உடனே சக்தியை திருச்சுழி காவல் நிலையத்திற்கு அழைத்துச்சென்றனர்.

திருச்சுழி காவல் நிலையத்தில் சக்தியின் ஆடைகளைக் களைந்து ஜட்டியுடன் நிற்க வைத்து பெயர் தெரியாத ஆனால் அடையாளம் தெரிந்த நான்கு காவலர்கள் லத்தியால் மாறி ,மாறி தொடை பின் பகுதியிலும், புட்டத்திலும் அடித்து சித்திரவதை செய்துள்ளனர். ஒரு காவலர் கையால் வலது காதில் மாறி, மாறி குத்தியுள்ளார். இதனால் சக்தியினுடைய வலது காதின் கேட்குந்திறன் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இச்செய்தியைக் கேள்விப்பட்ட சக்தியின் சித்தி மகன் குபேந்திரன் (17) திருச்சுழி காவல் நிலையத்திற்கு வந்துள்ளார். காவலர்கள் அவரையும் பிடித்து ஆடைகளைக் களைந்து ஜட்டியுடன் நிற்க வைத்து பிளாஸ்டிக் பைப்பால் அடித்துள்ளனர். அப்போது நான் எஸ்.சி குறவர் சாதி, பள்ளியில் படிக்கிறேன் எனக்கும் இதற்கும் சம்பந்தம் கிடையாது என்று கூறியுள்ளான். அதற்கு காவலர் ஒருவர் "குறவங்கள்ளா படிச்சி என்னடா செய்யப் போறீங்க?" என்று கேவலமாகப் பேசியுள்ளார். மற்றொரு காவலர் " குறப்பயலா நீ, அப்ப களவாண்டிருப்ப..." என்று இழிவாகப் பேசியுள்ளார்.

ஒரு கட்டத்தில் சக்தியும், குபேந்திரனும் அடி தாங்காமல் நிலைகுலைந்து போக காவலர்கள் அவர்களை அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று முதலுதவி அளித்து பின்னர் மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையில் அனுமதித்து உள்ளனர்.

இரு சிறுவர்களின் மீது திருச்சுழி காவலர்கள் நடத்திய சட்ட விரோதத் தாக்குதலையும், மனித உரிமை மீறலையும் மக்கள் கண்காணிப்பகம் வன்மையாகக் கண்டிக்கிறது.. மேலும் சாதியைக் குறித்து இழிவாகப் பேசிய காவலர்கள் மீது வன்கொடுமைத் தடுப்புச் சட்டதின் கீழ் குற்ற வழக்குப் பதிவு செய்து அவர்கள் பணியிடை நீக்கம் செய்யப் பெறவேண்டும் என்று மக்கள் கண்காணிப்பகம் வேண்டுகோள் விடுக்கிறது.

இச்சம்பவம் தொடர்பான புகார் மனு தேசிய பட்டியலின ஆணையத்திற்கும், மாநில மனித உரிமை ஆணையத்திற்கும் மக்கள் கண்காணிப்பகம் சார்பில் அனுப்பப்படுகிறது. மேலும் இது போன்ற சம்பவங்கள் இனிமேலும் தொடராமலிருக்க அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கண்காணிப்பகம் வலியுறுத்துகிறது.

இப்படிக்கு

(ஹென்றி திபேன்)

நிர்வாக இயக்குனர்